(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 286.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 யூலை 09, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2201/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டில் அமைச்சினால் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வீட்டு நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள் இலவசமாகவா வழங்கப்படுகின்றன என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வீடுகள் விற்கப்படும் அல்லது வாடகைக்கு விடப்படும் விலையினையும்;

(iii) அந்த வீடுகள் என்ன அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன என்பதையும்

அவர் மேலும் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2279/ '12

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிருவகிக்கப்படுகின்ற நாடளாவிய ரீதியலுள்ள நூலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நூலகங்களில் நூலக உதவியாளர் பதவியில் கருமமாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு வழங்கப்படுகின்ற மாதாந்த சம்பளம் அல்லது கொடுப்பனவுகள் யாதென்பதையும்;

(iv) அனுபவத்திற்கும் சேவைக்காலத்திற்கும் ஏற்ப அரச ஊழியர்களுக்கு உரித்துடைய பதவியுயர்வு வாய்ப்புகளும் ஓய்வூதிய உரித்துகளும் நூலக உதவியாளர் பதவிக்கும் உரித்துடையதாவென்பதையும்;

(v) மேற்படி பதவியுயர்வு வாய்ப்புகள் கிடைக்காவிடின் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அனுபவம் மற்றும் சேவைக்காலம் ஆகியவற்றிற்கேற்ப அரச சேவையில் பெரும்பாலானவர்களுக்கு உரித்துடைய பதவியுயர்வு வாய்ப்புகள் நூலக உதவியாளர்களுக்கு கிடைக்காமை பாரிய அநீதியென்பதுடன் மனித உரிமை மீறலாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களுக்கு இந்த உரிமை எத்தேதியில் பெற்றுக்கொடுக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2340/ '12

3.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) "மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு" கொள்கைத் தொடர் மூலமாக சுகாதார அமைச்சில் பெண் நோய் தடுப்பு தொடர்பான தனி வேறான பிரிவொன்றை ஆரம்பிக்க வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) தற்போது மேற்படி பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3068/ '12

4.

கௌரவ அஜித் பி. பெரேரா,—உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஊவா மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) ஊவா மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3286/ '12

5.

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இணைந்த சேவைக்கு உரித்தான அரசாங்க மொழி பெயர்ப்பாளர் சேவையில் பாரிய உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி சேவையில் இணைவதற்கும் சேவையில் நிலைத்து நிற்பதற்கும் உற்சாகமளிக்கும் வகையில் சம்பளம் மற்றும் சிறப்புரிமைகள் வழங்கப்படாமையினால் வெளியிலிருந்து நபர்கள் சேவைக்குள் ஈர்க்கப்படாமையும், சேவையில் இணைந்து கொண்டவர்களும் தொடர்ச்சியாக சேவையை விட்டு நீங்கிச் செல்வதும் மேற்படி உத்தியோகத்தர் பற்றாக்குறைக்கான காரணங்களாகும் என்பதையும்;

(iii) 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் ஒட்டுமொத்த சேவையும், முன்னர் அதற்கு சமமான மட்டத்தில் காணப்பட்ட ஏனைய சேவைகளுடன் ஒப்பிடுகையில் சம்பள அளவுத் திட்டங்களைப் பொறுத்தவரை கீழ் மட்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) இந்த நிலைமையானது மும்மொழி ரீதியிலான இலங்கையை முன்னிட்டான வேலைத்திட்டத்துக்கு முற்றிலும் முரணானது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மொழிபெயர்ப்பாளர் சேவை இழந்துள்ள உரிய வரவேற்பையும் சேவை அந்தஸ்தினையும் மீண்டும் பெற்றுக்கொடுப்பதற்கு தற்போது ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்கொள்ளப்பட்டுள்ள குறித்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3335/ '12

6.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 சனவரி மாதம் தொடக்கம் இற்றை வரை வீசா இன்றி சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறும் நடவடிக்கைகள் துரிதமாக அதிகரித்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி காலகட்டத்தினுள் சட்டத்தின் பிடியில் சிக்கவைக்கப்பட்ட சட்டவிரோத குடியகல்வோரின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) அவர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சட்டவிரோத குடியகல்வு நடவடிக்கை மேற்கூறப்பட்ட காலகட்டத்திற்கு முன்னரும் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) இல்லையெனில், மேற்படி நடவடிக்கை அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதா என்பதையும்;

(iii) சட்டவிரோத குடியகல்வோரை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதற்கு இதற்கு முன்னர் நடவடிக்கை எடுக்காதிருந்தமைக்குரிய காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3404/ '13

7.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு, நாவற்காட்டில் வசிக்கும் மாலரத்னம் சிங்கராசா என்பவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளாரா;

(ii) ஆமெனில், குறித்த சிறைச்சாலை யாது;

(iii) இவர் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது ஒரு சிறைக்கைதி என்ற ரீதியிலா அல்லது ஒரு சந்தேக நபர் என்ற ரீதியிலா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவர் கைது செய்யப்பட்ட திகதி, இடம் மற்றும் இவரைக் கைதுசெய்தவர்கள் யார்;

(ii) இவரை கைது செய்வதற்கு ஏதுவான குற்றச்சாட்டு மற்றும் ஏற்புடையதான சட்டம் யாது

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மாலரத்னம் சிங்கராசா என்பவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இதற்கு ஏதுவான குற்றச்சாட்டுக்கள், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட திகதி, வழக்கு இலக்கம் மற்றும் நீதிமன்றம் யாது;

(iii) மேற்படி வழக்கின் தற்போதைய நிலைமை யாது;

(iv) குறித்த நபரை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2463/ '12

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) "வடக்கின் வசந்தம்" மற்றும் "கிழக்கின் உதயம்" ஆகியன தொடர்பாக 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) ஏற்பட்ட செலவு மற்றும் அடைந்த நன்மைகளையும்;

(ii) ஏற்படுத்தப்பட்ட தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கையையும்; மற்றும்

(iii) ஏற்பட்ட சரியான செலவையும் மற்றும் காசோட்டத்தினைக் கொண்டு செலவிடப்பட்ட முழுப் பணத்தொகைக்கான சான்றுகளையும்

ஆண்டு அடிப்படையில் வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான "வடக்கின் வசந்தம்" மற்றும் "கிழக்கின் உதயம்" ஆகியவற்றுக்காகப் பெறப்பட்ட மொத்த உதவிகளையும் கொடைகளையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2504/ '12

9.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஜனகபுர வித்தியாலயத்தின் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஜனகபுர வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்காக கழியும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2634/ '12

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 ஆம் ஆண்டின் மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதங்களில் இலங்கையில் நடத்தப்பட்ட டெஸ்ட் கிரிக்கட் போட்டித் தொடரில் உள்ளடங்கிய போட்டிகளின் எண்ணிக்கை யாவையென்தையும்;

(ii) மேற்படி போட்டிகள் நடாத்தப்பட்ட விளையாட்டரங்குகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விளையாட்டரங்கிலும் பார்வையாளர் கூடங்களிலுள்ள ஆசனங்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(iv) மேற்படி விளையாட்டரங்குகளில் ஆசனங்களுக்காக அறவிடப்பட்ட கட்டணங்கள் யாவையென்பதையும்;

(v) இப்போட்டித் தொடரைக் கண்டுகளிப்பதற்காக சந்தைப்படுத்திய டிக்கெட் ஒன்றின் விலை யாதென்பதையும்;

(vi) மேற்படி டிக்கெட்டின் செல்லுபடியாகும் காலப்பகுதி யாதென்பதையும்;

(vii) மேற்படி விளையாட்டரங்குகளில் பார்வையாளர் ஆசனமொன்றுக்கான குறைந்தபட்ச பணத்தொகையாக ரூபா. 5000.00 அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3069/ '12

11.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்பிரகமுவ மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) சப்பிரகமுவ மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2515/ '12

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தின் சம்பத்நுவர வைத்தியசாலையில் பல்வேறு பௌதீக, மனித வள பற்றாக்குறைகள் காணப்படுவதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் காணப்படும் பௌதீக, மனித வள பற்றாக்குறைகள், குறைபாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனின், இதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2719/ '12

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ஆம் மற்றும் 2012ஆம் ஆண்டுகளில்,

(i) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) விசாரணைகளின் பின்னர் குற்றப்பகர்வுகள் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி வழக்கு வாரியாக (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வழக்குத் தொடர்பாகவும் கூறப்பட்டுள்ள குற்றம், வழங்கப்பட்டுள்ள அபராதம் மற்றும் தண்டனை யாவையென்பதையும்;

(iv) கிடைக்கப்பெறும் வழக்கொன்றை முடிவுறுத்துவதற்கு மேற்படி ஆணைக்குழுவிற்குத் தேவைப்படும் சராசரி காலப்பகுதி யாதென்பதையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(ஆ) (i) கௌரவ விஜேயதாஸ ராஜபக்ஷ் பா.உ. அவர்களின் தலைமையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையின் பிரகாரம் மேற்படி ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள விடயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி அறிக்கையின் விதப்புரைகளின் பிரகாரம் நடைமுறைப்படுத்திய நடவடிக்கை யாவையென்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய அறிக்கையில் தரப்பட்டுள்ள விதப்புரைகளுக்கு இணங்காமை மற்றும் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணம் யாவையென்பதையும்;

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2790/ '12

14\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லங்கா மஹாபொல கப்பல், வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கப்பல் வேறொரு நிறுவனத்திற்கு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட கப்பல் குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பின்,

(i) வழங்கப்பட்ட நிறுவனம்;

(ii) அவ்வாறு வழங்கிய திகதி;

(iii) குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் கடற்றொழிற்துறை அனுபவம்;

(iv) மேற்படி நிறுவனத்தின் நிதிச் சொத்துக்கள்;

(v) மாதாந்தம் கிடைக்கும் குத்தகை அல்லது வாடகைப் பணத் தொகை;

(vi) தற்போது மேற்படி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் பணத் தொகை மற்றும் பெற வேண்டியுள்ள நிலுவைப் பணத் தொகை

தனித்தனியே யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3070/ '12

15\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) வடமேல் மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் ( ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள்

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஸிவ்முனி ஸே வெஹெர பௌத்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2013 யூன் 05 ஆந் திகதிய 1813/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2013 யூன் 05 ஆந் திகதிய 1813/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2013 சனவரி 22 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்டதும், 2013.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

14.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

18.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.